செய்தி வெளியீடு எண்: 372 நாள் : 20.07.2016

# மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேவூர் எஸ்.இராமசந்திரன் அவர்களின் தலைமையில் மண்டல மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்கள் சீராய்வுக்கூட்டம்

==================================

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேவூர் எஸ்.இராமசந்திரன் அவர்கள் தலைமையில் இன்று (20.07.2016) இந்து சமய அறநிலையத் துறை செயல்பாடுகள் குறித்த அலுவலர்கள் கலந்தாய்வுக் கூட்டம், சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள ஆணையர் அலுவலகக் கூட்ட அரங்கில் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் 9117 திருக்கோயில்களில் திருப்பணிகள் முழுவதுமாக மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது. பல திருக்கோவில்களின் நின்று போன தேரோட்ட விழாக்கள் சிறப்புற தொடர்ந்து நடைபெற 144 திருத்தேர்கள் சீரமைக்கப்பட்டுள்ளன. திருக்கோயில்களுக்கு சொந்தமான திருக்குளங்கள் திருக்கோயில்களின் பயன்பாட்டிற்கு மட்டும் அல்லாமல் பொதுமக்களின் வாழ்வாதாரத்திற்கு நீர்நிலை ஆதாரங்களாக பயன்படுவதால் திருக்குளங்களை சீரமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு 611 திருக்குளங்கள் சீரமைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமது திருக்கரங்களால் திருக்கோயில்களில் அன்னதானம் திட்டத்தினை துவக்கிவைத்ததன் பயனாக தற்பொழுது, 724 திருக்கோயில்களில் அன்னதானத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழகத்தில் திருப்பணி மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடைபெறாத திருக்கோயில்களே இல்லை என்ற நிலையை உருவாக்குவது தான் இந்து சமய அறநிலையத்துறையின் தலையாய நோக்கமாகக் கொண்டு அலுவலர்கள் ஈடுபாட்டுடனும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் செயலாற்ற வேண்டும்.

தமிழக அரசால் நியமிக்கப்பட்ட தொல்லியல் வல்லுனர்கள் கொண்ட குழுவின் அறிவுரையை பெற்று திருக்கோயில்களை ஆய்வு செய்து அவற்றின் பழமை மாறாமல் புதுப்பிக்க அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமேன ஆய்வுக்கூட்டத்தில் அமைச்சர் அறிவுறுத்தினார்.

திருக்கோயில் நிலங்களின் பதிவுகள் கணினியில் பதிவு செய்து தரவுகள் மென்பொருளில் காக்கப்படவேண்டும். அதற்கான நடவடிக்கைகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள் பதிவுசெய்து திருக்கோயில் நிலங்கள் தவறாக பயன்படுத்தப்படுவதை இணையத்தில் மக்கள் பார்வைக்கே வைக்கும் அளவிற்கு புள்ளி விவரங்களை மேம்படுத்த வேண்டும். திருக்கோயில் பாதுகாப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட களவு எச்சரிக்கை மணி, CCTV மற்றும் இதர பாதுகாப்பு நடவடிக்கைகளை அனைத்து திருக்கோயில்களிலும் உடனடியாக செயல்படுத்த வேண்டும் என அமைச்சர் தெரிவித்தார்.

தமிழகத்தின் அனைத்து திருக்கோயில்களிலும் பக்தர்களுக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் சிறப்பாக செயல்படுவதை உறுதி செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அத்துடன் திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு எந்தவிதத்திலும் மனம் புண்படாதவண்ணம் அர்ப்பணிப்பு மனப்பான்மையோடு அவர்களை அணுகி தேவைகளை நிறைவேற்றித்தர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பக்தர்களின் வசதிக்காக அனைத்து திருக்கோயில்களிலும் நவீன கழிவறை, குளியல்அறை மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளை தனி மேற்பார்வையில் செய்திட நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். திருக்கோயில்களில் முக்கிய திருவிழாக்கள் நடைபெறும் காலங்களில் பெருமளவில் பக்தர்கள் வருகை தருவதால் விழாவில் எவ்வித அசம்பாவிதமும் நடைபெறாமல், உரிய பாதுகாப்பு முன்னேற்பாடுகளை செய்திடவும் அறிவுரை வழங்கினார்கள்.

மேலும், திருக்கோயில்களை தூய்மையாக பராமரிக்க, உழவாரப்பணி மூலம் கால முறைப்படி திருக்கோயில்கள், திருமதில்கள், திருக்குளங்கள், கோபுரங்கள், விமானங்கள் ஆகியவற்றில் வளர்ந்துள்ள செடிகளை அகற்றித் தூய்மைப்படுத்தவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் முனைவர் மா.வீரசண்முக மணி, கூடுதல் ஆணையர் (விசாரணை) திருமதி ந.திருமகள், கூடுதல் ஆணையர் (பொது) திரு.இரா.ஞானசேகரன், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், செயல் அலுவலர்கள் மற்றும் தலைமையிட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**